# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed Journal Multidisciplinary)

ISSN: 2582-399X



காலாண்டு இதழ்

(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)

ஆகிய மாதங்களில் வெளிவரும்

*Vol:7 Issue :28 October 2025*

கோட்டை:7 வாயில்:28 அக்டோபர் 2025

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research


# EDITORIAL BOARD


Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in



**Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan**

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,
Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

# அரண் Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

*International e Journal of Tamil Research*


## EDITORIAL BOARD


**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet,
Chennai - 600 021.

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்

+917299587879

www.aranejournal.com

aranjournal@gmail.com


அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# அகத்தினுள்

ஐங்குறுநூறு 'சிறுவெண் காக்கைப் பத்து' பாடல்களில் எடுத்துரைப்புச் சிறப்புகள் மற்றும் நுட்பங்கள்
முனைவர் நா.ஜானகிராமன்1, முனைவர் பெ.தனலட்சுமி2

குறுந்தொகையை தழுவிய இக்கால படைப்புகளில் இலக்கியநயம்
மெ.பேபி நிஷாந்தினி

பட்டினப்பாலையில் பழந்தமிழரின் கடற்பயணத்தில் மரக்கலங்கள்
ப.ராம்குமார்

புறநானூற்றில் உயிரியல் செய்திகள்
எம்ஜிராமச்சந்திரன். வெ

புறநானூற்றில் தமிழர் பண்பாடு
திருமதி கா.சுகன்யா,

செவ்வியல் இலக்கியங்களில் இல்லறத்தில் தாயின் பங்களிப்பு
இரா.சினேகலதா

திருக்குறளில் உழவும் உண்மைநிலையும்
முனைவர் இரா.ஜெய்சங்கர்

திருக்குறளில் மருத்துவச் செய்திகள்
முனைவர் சல்மா மஹஜபீன் த. மு

திருக்குற்றாலக் குறவஞ்சியில் குறத்தியின் குறிசொல்லும் பான்மை
க.நித்தியா

அபிராமி அந்தாதி - ஒரு பார்வை
சா.கஸ்தூரி

வேட்டுவர்களின் பண்பாட்டு சார்ந்த மரபுகள் — சிலப்பதிகாரம்
முனைவர் த. சுபஜா

வைணவ உரைச் சக்ரவர்த்தி பெரியவாச்சான் பிள்ளை
முனைவர்ப.தனஞ்செயன்

தெய்வங்களும் கோவில்களும்
அ.அறிவுக்கொடி

பெரும்பண்ணையூர், சிமிழி, புதுக்குடி கிராம மக்களின் சிறுதெய்வ வழிபாட்டில் மக்கட்பேறு சடங்குப் பின்புலம்
க.கார்த்திகா

அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்


பாம்பாட்டிச் சித்தர் பாடல்களில் சமுதாயச் சிந்தனைகள்
முனைவர். க.விமலா

திருக்குர்ஆன் கூறும் மாந்தர் ஒழுக்கங்கள்
அ.ஷமீலா பேகம்

ஜோ டி குரூஸின் யாத்திரை புதினத்தில் சிறுவனின் தேடல்கள்: கத்தோலிக்கம் மற்றும் பூர்வீக நம்பிக்கைகளின் புரிதல்கள்
முனைவர் தா. இரா.ஹெப்சிபா பியூலா சுகந்தி

கூகை புதினத்தில் கையாளப்பட்டுள்ள உத்தி முறைகள்
இரா.ராஜேஷ் குமார்

எஸ்.இராமகிருஷ்ணனின் மூன்று அற்புதங்கள் சிறுகதையில் தெக்கனின் பாத்திரப்படைப்பு
ஜெ.சர்மிளா

தோட்டியின் மகன் நாவலில் மக்களின் உணர்வுகளும் போராட்டங்களும் முனைவர் வ.மீனாட்சி

கூளமாதாரி புதினத்தில் தலித்தியம்
வீ. சவிதா

வெளவால் தேசத்தில் இயற்கை சூழல்
மு.ஹரிதேவி

சோ. தர்மனின் சூல் நாவலில் பழமொழிகள்
மு.கோமதி

சோ. தர்மனின் 'சூல்' நாவலில் உவமைகள்
இ.ராபர்ட் கென்னடி

மலையகத்தமிழரும் அகதி வாழ்வும்
வேளாங்கன்னி.ஏ

அண்மைய நாவல்களில் மீனவர்களின் பண்பாட்டியல்
முனைவர் ந. இரத்தினக்குமார்

கே.பி கறுப்பனின் பெண்ணியச் சிந்தைனகள்
தனிஜா த. பெ



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்


**பொதிகைமலையின் ஆயண்டிரன்**
**முனைவர் த. முத்துலட்சுமி**

**பாண்டிய நாட்டுத் துறைமுகங்கள்**
**கி.தமிழரசி**

**பழந்தமிழர்களின் வாழ்வியலில் மலர்ப் பயன்பாடு ஒரு பார்வை**
**முதுமுனைவர் பிரியாகிருஷ்ணன்**

**வாய்மொழிப் பாடல்களில் பஞ்சகாலக் குறிப்புகள்**
**ம.கலைச்செல்வன்**

**இலக்கியங்களும் பசிப்பிணியும்**
**முனைவர் ப. மணிகண்டன்**

**அறிவியல் நுட்பங்களும் இலக்கிய செழுமையும்**
**முனைவர் அ.புஷ்பா**

**கணினித்தமிழ் வளர்ச்சியில் இணைய நூலகங்கள்**
**கு.நிவேதா**

**மொழி வளர்ச்சியில் ஊடகத்தின் பங்கு**
**முனைவர் ஈ இசக்கியம்மாள்**

*1.The Predicament of Women in Patriarchal Society in Anita Nair's The Better Man*
**K. Nesapriya**

**திரைப்படக் கதைசொல்லலும் சமூகத் தாக்கமும்: அசுரன் திரைப்படம்.**
**(திரைப்படக் கோட்பாடுகள், தொழில்நுட்ப அழகியல் மற்றும் பார்வையாளர் வரவேற்பு)**
**திரு. விசுமாப்போடி சசிகரன்**

**பாலக்காடு மாவட்டத்தில் சுமை தாங்கி**
**முனைவர் வே.இரவி**

**கீழடி அகழாய்வு - தமிழரின் தொன்மையான வரலாற்று பின்புலம்**
**முனைவர் அ. மதலேன்**

**சம்புவராயர் கல்வெட்டுகளில் அறியலாகும் நாடும் ஊரும்**
**முனைவர்அ. அமுல்ராஜ்**

**பரதநாட்டியத்தில் நால்வகை விருத்தியின் வகிபங்கு**
**கலாநிதி தாக்ஷாயினி பரமதேவன்**



**அட்டைப்படம் உதவி**
**இணையம்**

**நன்றி**

# தமிழ்

# *VAISHNAVA VURAI CHAKKARAVARTHY PERIYAVACHAN PILLAI*

***Dr.B.Dhananjayan,*** *Head of Department and Associate Professor,Department of Tamil, Sir Thyagaraya College, Chennai. 21*

***Abstract:***

*Tamil devotional literature stands out in the history of Tamil literature. Nayanmars and Azhwars considered important figures in devotional literature. The Azhwars sang paashurams in praise of thirumal. This collection of four thousands divine versus discusses many important devotional themes. Many text have appeared for this four thousand divine phenomenon . Among them, the commentary of periyavachan pillai is worthy of admiration. Periyavachan pillai was born in chengannur near kumbakonam . He was a student of Kalatchepam from vaishnava acharyas and wrote many vaishnavi books. He who knows the Manipravala language. He is a man of great knowledge of the world matters are brilliantly presented in his commentaries. He is praised as the Chakkravarthy of VAISHNAVA Commentaries. The purpose of this article is to highlight the merits of Periya Vachan Pillai's speech.*

***Keywords:*** *Vaishnavism, Vishnu, Periya Vachan Pillai, Urai, Manipravalam*

# வைணவ உரைச் சக்ரவர்த்தி பெரியவாச்சான் பிள்ளை

**முனைவர்ப.தனஞ்செயன்,** துறைத் தலைவர் மற்றும் இணைப் பேராசிரியர்,தமிழ்த் துறை, சர் தியாகராயா கல்லூரி, சென்னை. 21

**ஆய்வுச் சுருக்கம்:**

தமிழ் இலக்கிய வரலாற்றில் பக்தி இலக்கியம் சிறந்து விளங்குகின்றது. பக்தி இலக்கியத்தில் நாயன்மார்களும் ஆழ்வார்களும் முக்கிய இடம்பெறக்கூடியவர்களாக இருக்கின்றார்கள். ஆழ்வார்கள் திருமாலைப் போற்றி பாசுரங்களைப் பாடினார்கள். நாலாயிர திவ்யப் பிரபந்தமான இப்பாடல்களின் தொகுப்பு பல முக்கியமான பக்தி பனுவல்களைப் பற்றி பேசுகின்றது. இந் நாலாயிர திவ்யப் பிரபந்தத்திற்கு உரைகள் பல தோன்றின. அவற்றுள் பெரியவாச்சான் பிள்ளையின் உரை போற்றுதலுக்குரியது ஆகும். பெரியவாச்சான் பிள்ளை கும்பகோணத்திற்கு அருகே பிறந்தவர். வைணவ ஆசாரியர்களிடம் காலட்சேபம் கேட்டவர். பல வைணவ

நூல்களை எழுதியவர். மணிப்ரவாள நடையில் ஞானம் பெற்றவர். உலகில் செய்திகள் இவருடைய உரைகளில் பொலிவோடு எடுத்தியம்பப்பட்டுள்ளன. இவர் வைணவ உரைச் சக்கரவர்த்தி எனப் போற்றப்படுகின்றார். பெரிய வாச்சான் பிள்ளையின் உரையின் சிறப்பினை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**திறவுச் சொற்கள்:** வைணவம், விஷ்ணு, பெரிய வாச்சான் பிள்ளை,உரை, மணிபிரவாளம்

**அறிமுகம்:**

தமிழ் இலக்கிய வரலாற்றில் பக்தி இலக்கியம் சிறந்து விளங்குகின்றது. பக்தி இலக்கியத்தில் சைவ வைணவ பக்தி பாடல்கள் கி.பி 6 ஆம் நூற்றாண்டு முதல் 9ஆம் நூற்றாண்டு வரையிலான இடைப்பட்ட காலத்தில் தோன்றிய நாயன்மார்கள் ஆழ்வார்களால் வளர்க்கப்பட்டன. ஆழ்வார்கள் அருளிய நாலாயிர திவ்யப் பிரபந்தத்தில் அமைந்த இரகசியத் தத்துவ பொருட்களை ஆசாரியர்கள் ஓராண் வழிக் கற்றல் வழியாகவும், வாய் மொழியாகவும் உபதேசித்தனர்.முதன் முதலில் வாய்மொழியாகக் கூறப்பட்டு வந்த விளக்கங்கள் யாவும் ஏட்டிலே எழுத வழி வகுத்தவர் இராமானுஜர் அவர். அதன் பொருட்டு வெளி வந்த உரையே திருவாய்மொழிக்கு திருக்குருகைப்பிரான் பிள்ளான் எழுதிய ஆறாயிரப்படி என்னும் உரையாகும். இவ்வகையில் உரைகள் வளரவே நம்பிள்ளையின் சீடராக விளங்கிய பெரியவாச்சான் பிள்ளை இதிகாசங்கள் பிரபந்தங்கள் ஸ்தோத்திரங்கள் கத்தியங்கள் ஆகிய நான்குத் துறைகளில் மணிப்பிரவாள நடையில் உரைகள் எழுத தொடங்கினார்.

**பெரியவாச்சான் பிள்ளையின் காலம் :**

பெரியவாச்சான் பிள்ளை கலியுகத்தில் சர்வசித் வருடம் ஆவணி மாதம் (ஆங்கில வருடம் 1167) கிருஷ்ணாட்டமி ரோகிணி நட்சத்திரத்தில் தமிழ்நாட்டில் சங்கநல்லூர் என்னும் கிராமத்தில் பிறந்தார். இவரது தாய் தந்தையர்கள் யாமுன தேசிகர் நாச்சியாரம்மாள் ஆவர். இவருக்கு பெரியவாச்சான் பிள்ளை, அபயப் பிரதராஜர், ஸ்ரீமத் கிருஷ்ணர் எனப் பல பெயர்கள் உண்டு (1).

**கல்வியும் விருதும் :**

ஸ்ரீரங்கத்தில் நம் பிள்ளையை ஆசாரியாராகக்கொண்டு பெரியவாச்சான் பிள்ளை எல்லாப் பொருள்களையும் நன்றாகக் கற்று சொற்பொழிவு செய்து வந்தார். (2)

பெரியவாச்சான் பிள்ளையின் கல்விச் சிறப்பை சொல்லும் போது வைணவ ஆசாரியர்களில் இரகசிய நூல்களை ஓராண்வழிக் கல்வி வழி உபதேசித்து பாதுகாத்தவர் திருக்கோட்டியூர் நம்பிகள் என்றும், திருவாய்மொழியின் பொருளை விவரித்துச் சொல்வதில்

வல்லவராக இருந்தவர் திருமலையாண்டான் என்றும், ஸ்ரீ ராமாயணப் பொருளை விவரித்து உரைப்பதில் சீர்மை பெற்று இருந்தவர் பெரிய திருமலை நம்பிகள் என்றும் வைணவத்தில் இன்றியமையாத இம்மூன்று துறைகளில் பொருள்களையும் தம் முன்னோர் இடம் கேட்டதிலிருந்து பெரியவாச்சான் பிள்ளை தம் நெஞ்சிலே தேக்கி வைத்திருந்து பின்னர் சீடர்களுக்கு உபதேசித்தார் என்றும் குறிப்பிடுவர். (3) பெரியவாச்சான் பிள்ளை பின்புள்ளோரும் உய்யும்படி அருளிச்செயல்கள் ஸ்ரீராமாயண சுலோகங்கள், இரகசியங்கள், கத்தியங்கள் ஆகிய நான்கு துறைகளில் உள்ள மூல நூல்களுக்கு உரை எழுதியுள்ளார்.

**குணநலன்களின் பெருமை :**

நம்பிள்ளையின் சீடராய் இருந்தபோது சீடனுக்கு உரிய நல்ல குணங்களை இயல்பாகக் கொண்டு விளங்கியவர் பெரியவாச்சான் பிள்ளை. அவரே ஆசாரியரான போது தம் சீடர்களைக் கொண்டாடும் பெருமை பெற்று சாது குணம் நிறைந்தவராய் இருந்தார் . இவர் அருளிய திருப்பாவை மூவாயிரப்படி எனும் உரையில் முன்னோர் சொன்னதை முறை தப்பாமல் கூறும் பண்பு ஆங்காங்கே காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். எடுத்துக்காட்டாக 'யசோதை இளம் சிங்கம்' என்னும் இடத்தில் இளஞ்சிங்கம் என்பதற்கு 'சிங்கக்குருகு' என்று பட்டர் அருளிச் செய்ததை குறித்தது தனிச்சிறப்பு.(4). அதேபோன்று இராமானுசர் மேல் உள்ள ஆசார்ய பக்தியினாலும் அன்பினாலும் 'உந்து மதகளிற்றன்' என்னும் திருப்பாவை பாட்டை 'எம்பெருமானார் சிறப்பித்து உகந்திருக்கும் பாட்டு' என்று குறிப்பிட்டுள்ளார் (5).

வைணவ ஆசாரியர்களில் ஒருவரான நம் பிள்ளையின் தூண்டுதலின் பேரில் பெரியவாச்சான் பிள்ளை திருவாய்மொழிக்கு இருபத்து நாலாயிரப்படி என்ற உரையை அருளினார். இதுபற்றியே மணவாள மாமுனிகள் "நம் பிள்ளை தம்முடைய நல்லருளால் ஏவியிட பின் பெரியவாச்சான் பிள்ளை அதனால் இன்பா வருபத்து மாறன் மறைப்பொருளைச் சொன்னது இருபத்து நாலாயிரம்" என்று குறிப்பிட்டதன் மூலம் அறியலாம் (6). மேலும், மாமுனிகள் திருவாய்மொழியை உரையால் காத்த பெருமை படைத்த பெரியவாச்சான் பிள்ளை உள்ளிட்ட ஐவரை 'திருவாய்மொழியைக் காத்த குணவாளர்கள்' என்று உபதேசரத்தின மாலையில் போற்றுவர் (7).

**பெரியவாச்சான் பிள்ளையின் நூல்கள் :**

பெரிய மச்சான் பிள்ளை நூற்றுக்கணக்கான நூல்களை அருளிச் செய்ததாகவும், அவற்றில் பல பாதுகாப்பின்றி மறைந்ததாகவும், தற்சமயம் 60 நூல்களுக்கு மேல் இருப்பதாகவும் கூறுவர் (8).

அவற்றில் முக்கியமானவை:

1. நாலாயிரத்துக்கும் எழுதிய உரைகள் (வியாக்கியானங்கள்)
2. கத்யத்ரய வியாக்கியானங்கள் (ஶ்ரீரங்க கத்யம், வைகுண்ட கத்தியும், சரணாகதி கத்யம்)
3. ஆளவந்தார் ஸ்தோத்திர ரத்ன வியாக்கியானங்கள்
4. சதுச்லோகி வியாக்கியானம்
5. தனிச்லோகி வியாக்கியானம்
6. அபயப்ரதான வியாக்கியானம்
7. திரிமத சித்தாந்த சார சங்கிரகம்
8. ஜிதந்தே ஸ்தோத்திர வியாக்கியானம்
9. பாசுரப்படி இராமாயணம்
10. கலியன் அருள் பாடு
11. பரந்த ரகசியம்
12. மாணிக்க மாலை
13. நவரத்தின மாலை
14. சகல ப்ரமாண தாத்பர்யம்
15. உபகார ஸ்மிருதி
16. சரம ரகசியம்
17. அநுசந்தான ரகசியம்
18. நிகமனப்படி
19. பிரபந்த ரகசியம்
20. ரகசிய த்ரய தீபிகா
21. ரகசிய த்ரய விவரணம்

மேலே குறிப்பிடப்பட்டுள்ள நூல்களில் முதல் எட்டு நூல்களைத் தவிர மற்றவை யாவும் அவரது தனி நூல்களாய் மணிப்பிரவாள வடமொழி நூல்களாய் அமைந்தனவாகும்.

**மொழிநடை :**

பெரியவாச்சான் பிள்ளை உரைகளில் எளிய நடை விஞ்சியிருப்பதைக் காணலாம் . விரிவாக உரைக்கும் பொருளைச் சிறிய சிறிய வாக்கியத்தினால் மிக மஅழகாக உரைக்கும் பாங்கு சிறந்து விளங்குகிறது. இவருடைய சொல்லாட்சி குறிப்பாக திருப்பாவையில் தமிழ் வடமொழிச் சொற்கள் முறையே 2:1 என்னும் விகிதத்தில் இடம்பெற்றுள்ளதைக் காணலாம் (9). சான்றாக "மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளால்...."என்னும் பாசரத்தில் "கார் மேனி "என்னும் சொல்லுக்கு "நம்முடைய சகல தாபங்களும் ஆறும்படியான வடிவு" என்று குறிப்பிடும் தொடரில் தமிழ் மொழி அதிகமாகும், வடமொழி குறைவாகும் வந்ததனைக் காணலாம் (10).

**உரைநடைச்சிறப்பு :**

பெரியவாச்சான் பிள்ளை, தம் உரையில் இறைத்திருமேனியோடு உலகியல் காட்டுவது தனிச்சிறப்பு அதன்படி அவரது உரையின் எழில் வண்ணத்தை கீழே காணலாம்.

**இயற்கை :**

பெரியவாச்சான் பிள்ளை தம் உரையில் இயற்கை வளத்தைச் சுட்டும் வகையில் உவமைகளை அளித்துள்ளார். "கனைத்திளங்கற்றெருமை கன்றுக் கிரங்கி" என்னும் பாடலில் 'நின்று பால் சோர' என்னும் தொடருக்கு பொருள் வழங்குகையில் திருமலையில் பாயும் திரு அருவிகளானவை மநில்லாமல் பாய்வதை எடுத்துக்காட்டி அதுபோல கற்றெருமைகளும் பாலை நில்லாமல் சொறிந்து கொண்டிருப்பதாக உரைக்கிறார் (11).'திருமலையில் திருவருவிகள் போலே' என்பது அந்த உவமை. இது தொல்காப்பியர் கூற்றுப்படி மவினையடிப்படையில் எடுக்கப்பட்ட உவமையாகக் கொள்ளலாம்.

**அன்றாட வாழ்க்கை :**

பெரியவாச்சான் பிள்ளையின் உரையில் அன்றாட வாழ்க்கைப் பற்றிய சிந்தனைகளும் வெளிப்படுகின்றன. அதாவது சாதாரணமாக கர்ப்பிணிகள் குழந்தை பெறும் வரையில் உட்கார்ந்து எழுந்து கொள்ளும் போது வயிற்றுக்கு நோவு வராமல் கலங்காமல் எழுந்திருப்பர். அதன்படி 'புள்ளும்' என்ற பாடலில் முனிவர்களும், யோகிகளும் மெள்ள எழுந்து அரிஅரி என்று சொல்லுவர். இதனை விளக்கும் வகையில் பிள்ளை இந்த அன்றாட வாழ்க்கை இயல்பை முனிவர்கள் தவத்திற்கு ஒப்பாக காட்டுவர் (12).

**மருத்துவம்:**

பால் இன்றியமையாத உணவுப் பொருள். இது சுவை மிக்கது; இச்சுவை காரணமாகப் பால் குடிப்பவனுக்கு பித்தம் தானாக போய்விடும்.. இக்கருத்தை உணர்த்தும்

வகையில் 'மாயனை' என்ற பாடலின் அவதாரிகையில் இறைய அனுபவம் ஏற்பட உணர்த்தும் போது சேர்ப்பால் இனிமையாகப் பருகுபவனுக்குத் தன்னடையே பித்தம் போமா போலே என்ற உவமையைக் காட்டி விளக்குவர் (13).

**பண்டைய நாகரீகம்**

தமிழ் இலக்கிய நூல்கள் யாவும் அந்தந்த கால நாகரீக பழக்கவழக்கங்களைக் கொண்டு அமைந்துள்ளன. அவற்றை இனங்கண்டு எடுத்துரைப்பது எளிது. திருப்பாவையில் ஆண்டாள் ஆய்ப்பாடியினுடைய மக்களின் பழக்கவழக்கங்களைக் காட்டிச் செல்வதை பல பாடல்கள் மூலம் அறியலாம். இருப்பினும் அப்பாடல்களுக்கு உரை எழுதிய பெரியவாச்சான் பிள்ளை அவர் வாழ்ந்த காலத்தில் இந்த உலக வாழ்க்கையின் பழக்கவழக்கங்களைத் தொடர்பு படுத்தி பல செய்திகளை வழங்கியுள்ளார்.

' தாயன்பு' என்பதற்கு 'தூங்குகின்ற குழந்தையை தழுவிக் கொண்டு கிடப்பவள் தாய் '(14) என்றும் 'சாதிப் பேச்சு' - மாணிக்கத்தால் படுக்கையைச் செய்தாலும் அதனை இடையர்கள் கட்டில் என்று சொல்வார்கள் (15), 'வசீகரித்தல்' - ஒருவனை தன் வசப்படுத்துவதற்காக அம்மான் பொடி தூவுவர் (16), 'தாய் - பிள்ளை உறவு - பிரிந்தால் தாய் பக்கலில் மக்கள் நிற்பர்(17). பிச்சேறின குழந்தை தாய் முன்னே நின்றால் தாயைக் கொல்லும் ; அவள் தூரத்தில் நின்றால் தன்னை முடித்துக் கொள்ளும் (18). 'இயற்கை எழில்' - சூரியனைக் கண்டால் தாமரை பூ மலரும் (19). 'மிருகங்களின் தன்மை' - எருதினுடைய நடையில் வீறும், மதம் பிடித்த யானையினுடைய நடையில் மதிப்பும், புலியினுடைய நடையில் கோபமும், சிம்மத்தினுடைய நடையில் பரா அபிநவ சாமர்த்தியமும் தோன்றும் (20).

இங்ஙனம் உரைச் சக்கரவர்த்தியான பெரியவாச்சன்பிள்ளை அவர்கள் வைணவப் பிரபந்தங்களுக்கு அமுதத் தமிழோடு வடமொழிச் சேர்த்து மணிப்பிரவாள நடையில் உரை எழுதி தமிழ் பக்தி இலக்கியத்திற்கு மகுடம் சூட்டினார்.

**சான்றெண் விளக்கம் :**


1.பெரிய திருமுடி அடைவு ப.597

2. தமிழ் இலக்கிய வரலாறு ( 13ஆம் நூற்றாண்டு) ப.334

3. திருப்பாவை வியாக்யானங்கள், பெரியவாச்சான் பிள்ளை வைபவம் ப.11

4. திருப்பாவை பா.1 உரை ப.35

5. திருப்பாவை பா.18 உரை ப.315

6. உபதேச ரத்தினமாலை பா.41

7. மேலது. பா.39

8. திருப்பாவை வியாக்கியானங்கள், பிள்ளை வைபவம் ப.11

9. ஸ்ரீ வைஷ்ணவ மணிப்பிரவாளா ப.79

10. திருப்பாவை பா.1, உரை ப.35.

11. திருப்பாவை பா 12, உரை ப.223.

12. திருப்பாவை பா7,8,9 உரை ப.181,182,188

13. திருப்பாவை பா5, உரை ப.118.

14. திருப்பாவை பா.17 உலகளந்த

15. திருப்பாவை பா19, கொங்கை

16. திருப்பாவை பா9 மந்திரப்பட்டாளோ

17. திருப்பாவை பா.18 உன் மைத்துனன் பேர்பாட

18. திருப்பாவை பா 25, உரை ப.430

19. திருப்பாவை பா 22 உரை ப.381.

20. திருப்பாவை பா 23 உரை ப.395.

**துணை நூற் பட்டியல்:**

1. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், ( ப.ஆ.), திருப்பாவை வியாக்கியானங்கள், ஸ்ரீனிவாசா பிரஸ், திருச்சி - 1991.

2.அரவிந்தன், மு.வை; உரையாசிரியர்கள், மணிவாசகம் நூலகம், சிதம்பரம், 1977.

3.கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், எஸ், (ப.ஆ.) ஆறாயிரப்படி குருபரம்பராப்ரபாவம், ஸ்ரீனிவாச பிரஸ், திருச்சி, 1981.

4. ஞானசுந்தரம், தெ. வைணவ உரைவளம், தாயம்மை பதிப்பகம், சென்னை, 1989.

5. சுப்ரமணியப்பிள்ளை , கா., இலக்கிய வரலாறு, சென்னை, **1970.**

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.
வரும் 2026, ஜனவரி மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - ஜனவரி 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜூலை இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com